## (ஏ) விலைவாசிகளும் கூலிகளும்

### விலைகள்

#### பொழிப்பு

1968ம் ஆண்டிற் பல பண்டப் பொருட்களினதும் விலைகளிற் கூரிய அதிகரிப்புக்கள் காணப்பட்டன. கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியால் அளவிடப்பட்டபடியான நுகர்வு விலைகள், 1967ம் ஆண்டில் 2.2 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், 1968ம் ஆண்டில் 5.9 சதவீதத்தால் உயர்வுற்றன. விலைக்குறிகாட்டிக்கு வெளியேயுள்ள சில நுகர்வுப் பொருட்களின் விலைகளும் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்திருக்கையில், 1968ம் ஆண்டின் சில முதலீட்டப் பொருட்களின் விலைகள் குறைவுற்றன.

1968ஆம் ஆண்டின் விலைகளிலேற்பட்ட உயர்விற்குப் பல காரணிகள் உள. உருளைக்கிழங்குபோன்ற சில விவசாயப் பொருட்களினது விலைகளின் உயர்விற்கு அவைகளின் தட்டுப்பாடே காரணமாகவிருக்கையில், ஏனைய பல விலைகளின் அதிகரிப்புக்குப் பிரதானமாக 1967ஆம் ஆண்டிலேற்பட்ட கப்பற் கூலிகளின் உயர்ச்சியும், சில தயாரிப்புப் பொருட்களின்மீது விதிக்கப்பட்ட உயர்ந்த சுழல்வு வரிகளும், 1967 நவெம்பரிலேற்பட்ட இலங்கை ரூபாவின் நாணய மதிப்பிறக்கமும், 1967ஆம் ஆண்டு திசெம்பரிலேற்பட்ட கூலி அதிகரிப்புகளும், 1968 மேயிற் புகுத்தப்பட்ட அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டமும் காரணங்களாகவிருந்தன. பல சந்தர்ப்பங்களில், விலை அதிகரிப்புக்கள் மேற்கூறப்பட்ட பல காரணிகளின் ஒருமித்த விளைவாகும்.

விலைகளைக் குறைப்பதற்கான சில சக்திகளுமிருந்தன. இவை, பிரதானமாக இறக்குமதி உத்தரவுச் சீட்டுக் கட்டணங்களின் நீக்கமும், இறக்குமதித் தீர்வைகளின் குறைப்பும், அத்துடன் உற்பத்தி அதிகரிப்பினாலும், அ.செ.உ.சா. திட்டத்தின்கீழ் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையினாலும், தட்டுப்பாடுகள் குறைவுற்றமையினாலுமேயாகும். இச்சக்திகள் கட்டடப் பொருட்கள்போன்ற பல விடயங்களின் விலைகளிற் குறைப்பை ஏற்படுத்தியதுமன்றி ஏனைய விடயங்களினது விலைகளிலும் கூரிய அதிகரிப்புக்களைத் தடைப்படுத்தியதாகத் தெரிகின்றது.

#### கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி[1]

பண்டப் பொருள் தொகுதிகளின்படியும், துறைகளின்படியும் பகுக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியின் ஆண்டுச் சராசரிகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது:

---

1. விலைகளின் பொதுமட்ட மாற்றங்களை ஆராய்வதற்கு இவ்விலைக் குறிகாட்டிகளை உபயோகிப்பதிலுள்ள குறைபாடுகள் முந்திய ஆண்டறிக்கைகளில் ஆராயப்பட்டுள்ளன. இதன் பிரதான குறைபாடுகள் நுகர்ச்சியாளர்களின் சகல பகுப்புக்களையும் உள்ளடக்காத தன்மையும் 1952இன் பின் திருத்தியமைக்கப்படாத பழமையான நுகர்ச்சிச் செலவுகளின் அமைப்பை அடிப்படையாகக் கொண்ட அளவுப் பிரமாணங்கள் உபயோகிக்கப்படுவதுமாகும்.

## அட்டவணை II (ஏ) 1

## கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி

## ( அடிவருடம் 1952=100 )

| ஆண்டு | சகல விடயங்களும் | பண்ட வகைப்படி | | | | | துறை வகைப்படி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உணவு | உடை | எரிபொருளும் விளக்கும் | வாடகை | பல்வகைப் பொருட்கள் | உள்நாட்டுத் தொகுதி | இறக்குமதித் தொகுதி | ஏற்றுமதித் தொகுதி |
| 1958 | 105.0 | 105.8 | 87.5 | 101.0 | 101.5 | 113.1 | 109.2 | 97.0 | 135.0 |
| 1959 | 105.2 | 104.7 | 92.1 | 102.4 | 101.5 | 115.3 | 108.0 | 97.1 | 153.1 |
| 1960 | 103.5 | 100.8 | 95.1 | 102.7 | 101.5 | 117.5 | 108.9 | 93.7 | 138.4 |
| 1961 | 104.8 | 99.8 | 103.9 | 104.4 | 101.5 | 122.8 | 112.3 | 94.6 | 119.1 |
| 1962 | 106.3 | 100.9 | 108.2 | 105.6 | 101.5 | 124.9 | 113.9 | 96.7 | 113.8 |
| 1963 | 108.8 | 103.0 | 118.2 | 103.0 | 101.5 | 126.6 | 113.4 | 102.5 | 117.7 |
| 1964 | 112.2 | 106.4 | 127.2 | 103.2 | 101.5 | 129.3 | 116.7 | 106.6 | 115.3 |
| 1965 | 112.5 | 107.3 | 126.8 | 100.7 | 101.5 | 128.3 | 116.4 | 106.4 | 127.2 |
| 1966 | 112.3 | 109.1 | 117.0 | 95.9 | 101.5 | 127.3 | 116.8 | 105.4 | 127.6 |
| 1967 | 114.8 | 112.7 | 116.7 | 96.5 | 101.5 | 128.9 | 117.1 | 111.2 | 123.9 |
| 1968 | 121.5 | 121.2 | 120.1 | 1093.2 | 101.5 | 133.6 | 123.2 | 117.3 | 142.4 |

மூலங்கள்: குடிசனமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களமும் இலங்கை மத்திய வங்கியும்.

1966ம் ஆண்டு 112.3 புள்ளிகளிலிருந்து 1967ல் 114.8 புள்ளிகளுக்கு 2.2 சதவீதத்தால் அதிகரித்த 'சகல விடயம்' என்பதன் விலைக் குறிகாட்டி 1968ஆம் ஆண்டில் 121.5 புள்ளிகளுக்கு அதிகரித்து, 5.9 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. 1968ம் ஆண்டின் அதிகரிப்பு சென்ற ஆண்டைப் போல், ஏறக்குறைய முழுவதும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் ஏற்பட்டது. 1967 திசெம்பரில் 119.3 புள்ளிகளாக அமைந்த மாதாந்தக் குறிகாட்டி சில ஏற்றவிறக்கத்தின்பின் (பின்னிணைப்பு IIல் அட்டவணை 44ஐப் பார்க்கவும்), 1968 யூனில் 120.3 புள்ளிகளுக்கு அதிகரித்தது. அதன்பின் உறுதியாக உயர்வுற்று, 1968 திசெம்பரில் 127.4 புள்ளிகளையடைந்தது.

1968ம் ஆண்டில் வாடகைத் தொகுதிக் குறிகாட்டியை (இது 1954 தொடக்கம் 101.5 புள்ளிகளில் மாற்றமுறாதிருந்தது) தவிர்ந்த சகல பண்டப் பொருட் தொகுதிகளினதும் உப-குறிகாட்டிகள் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. 1967ம் ஆண்டின் 112.7 புள்ளிகளிலிருந்து 1968ல் 121.2 புள்ளிகளுக்கு உயர்வுற்ற உணவுத் தொகுதியிலேயே மிகப் பெரிய அதிகரிப்பு ஏற்பட்டது. மாதாந்த விவரங்களின்படி இவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களிலும் உணவுக் குறிகாட்டி 1967 திசெம்பருக்குரிய 120.1 புள்ளிகளிலிருந்து 1968 யூனில் 120.6 புள்ளிகளுக்கு மட்டுமே அதிகரித்து, ஓரளவிற்கு நிலையாகவிருந்தது. இது, 1968 திசெம்பரில் 127.4 புள்ளிகளான மிக உயர்ந்த மட்டத்தைப் பதிவுசெய்தது. பால் மா, வெந்தயம், பம்பாய் வெங்காயம், கோதுமை மா, கடுகு, பசும் வெண்ணெய் போன்ற சில இறக்குமதிப் பொருட்களின் விலைகளிற் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புகள் பதிவுசெய்யப்பட்டன. இவ்விலைகளின் அதிகரிப்பு நாணய மதிப்பிறக்கத்தினுல் இப்பொருட்களின் இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தமையாலும், அத்துடன் வெண்ணெயைப் பொறுத்தமட்டில் 1968 மே தொடக்கம் அ.செ.உ.சா. திட்டம் புகுத்தப்பட்டமையினுலும் ஏற்பட்டதாகும். உள்ளூர் உற்பத்தி உணவுப் பொருட்களின் விலைகளும் 1968ற் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புகளைப் பதிவுசெய்தன; அதாவது, புளி, தேங்காய், தேங்காயெண்ணெய், முட்டை, மிளகாய், பப்படம், உருளைக்கிழங்குகளின் விலைகள் உயர்வுற்றன. உருளைக்கிழங்குகளின் விலை அதிகரிப்பு, 1967 மேயில் இறக்குமதித் தடைவிதிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட தட்டுப்பாட்டினுலாகும். தேங்காயினதும், தேங்காயெண்ணெயினதும் அதிகரித்த விலைகளின், 1968ம் ஆண்டின்போது உலகச் சந்தைகளில் எண்ணெயின் விலைகள் உயர்வுற்றமையைப் பிரதிபலித்தன.

கொள்வனவு செய்யப்பட்ட உணவு, தேயிலை (பீ.ஓ.பீ.), விஞக்கிரி, சிறு வெங்காயம், பலசரக்குகள், இறைச்சி, மீன், காய்கறிகள், வாயுப் பானம், குளிர் பானங்கள், வெள்ளைச்சீனி, தகரப்பால் ஆகியவற்றில் 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதங்கொண்ட சாதுவான விலை அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. இலங்கை ரூபாவின் நாணய மதிப்பிறக்கத்தைத் தொடர்ந்து, 1967 திசெம்பரில் அரசாங்கத்தினுல் வெள்ளைச்சீனியின் விலை 5 சதத்தினுல் உயர்த்தப்பட்டது. வாயுப் பானங்களினதும் குளிர் பானங்களினதும் விலை உயர்விற்கு, 1968 யூலையில் சுழல்வு வரி 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமை ஓரளவு காரணமாகும்; 1967 திசெம்பர் தொடக்கம் ''நாணய மதிப்பிறக்க இடைக்காலப் படிக்'' கொடுப்பனவைத் தொடர்ந்து கூலிச் செலவுகள் அதிகரித்தமையும் இதற்குக் காரணமாகும்.

இஞ்சி, விசுக்கோத்து, கருவாடு, ஆகியவற்றில் 1 முதல் 4 சதவீதங் கொண்ட விலை அதிகரிப்புக்கள் கவனிக்கப்பட்டன. எனினும், சில விடயங்களின் விலைகள் கூர்மையாக வீழ்ச்சியுற்றன. அவையாவன கொத்தமல்லியும், எலுமிச்சங் காய்களுமாகும். தேயிலைத் தூள், கோப்பிக்கொட்டை, மிளகு, சீரகம், பன்றி இறைச்சி ஆகியவற்றின் விலைகள் 3 முதல் 10 சதங்களால் வீழ்ச்சி யுற்றன. கறிச்சரக்குகள் வாசனைச் சரக்குகள், மாசிக் கருவாடு ஆகியவை சிறிய வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன.

ஆடைத் தொகுதிக்குரிய உப-குறிகாட்டிகளின்படி, ஆடைவகைகளின் விலைகள் முந்திய மூன்று ஆண்டுகளிலும் வீழ்ச்சியுற்றமைக்கெதிராக 1968ல் அதிகரித்தன. இத்தொகுதியின் ஆண்டுச் சராசரிக் குறிகாட்டி 1967ற்குரிய 116.7 புள்ளிகளிலிருந்து 1968ல் 120.1 புள்ளிகளுக்கு அதிகரித்தது. இவ் உப-தொகுதியின் மாதாந்த விலைமாற்றங்களை ஆராயுமிடத்து இவ்விலை அதிகரிப்புக்கள் இவ்வாண்டின் பின்னரைப் பகுதியிலேயே ஏற்பட்டதெனக் காட்டுகின்றது. ஆடைத் தொகுதியினுள்ளே, காற்சட்டைத் துணி, வேட்டிகளின் விலைகள், 2 முதல் 4 சதவீதங்களால் அதிகரித்திருக்கையில், சேட்டுத் துணிகள், சேலைகள், சீத்தைகள், 2 சதவீதத்திலும் குறைவான சிறிய அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.

எரிபொருள், விளக்கு என்ற தொகுதியின் உப-குறிகாட்டி கடந்த பல ஆண்டுகளாக வீழ்ச்சியடையும் போக்கைக் காட்டியதற்கெதிராக, 1967க்குரிய 96.5 புள்ளிகளிலிருந்து 1968ல் 103.2 புள்ளிகளுக்குக் கூர்மையாக அதிகரித்தது. இத்தொகுதியில் மின்சக்தி, மண்ணெண்ணெய், விறகு, தீப்பெட்டி ஆகியன அடங்கும். இக்குறிகாட்டியில் ஏற்பட்ட அதிகரிப்பு மண்ணெண்ணெய், விறகு, ஆகியவற்றின் அதிகரிப்புகளினுலாகும். மண்ணெண்ணெயின் விலை கலனுக்கு 5 சதத்தால் 1967 திசெம்பர் தொடக்கம் அதிகரிக்கப்பட்டது.

பல்வேறு பொருட்களின் தொகுதிக்குரிய உப-குறிகாட்டி 1967ற்குரிய 128.9 புள்ளிகளிலிருந்து 3.6 சதவீதத்தால் 1968ல் 133.6 புள்ளிகளுக்கு அதிகரித்தது. இத் தொகுதியின் மாத விவரங்களின்படி இவ்வதிகரிப்பு பெரும்பாலும் 1968 யூலை-திசெம்பர் காலப் பகுதியிலேயே ஏற்பட்டுள்ளது. சனவரி மாதத்தில் 129.2 புள்ளிகளாகவிருந்த இக்குறிகாட்டி யூனில் 131.6 புள்ளிகளுக்கு அதிகரித்து, பின்னர் கூர்மையாக உயர்வுற்று திசெம்பர் மாதத்தில் 139.0 புள்ளிகளையடைந்தது. மேற்போக்கான விலை மாற்றங்கள் புகையிலை, சிகையலங்காரம், கழுவுசுத்திப் பொருட்கள், குடிவகை, புதினப் பத்திரிகைகள், பயிற்சிக் கொப்பிகள், சலவை, ஆகியவற்றிற் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மிதி வண்டிற் ரயர்கள், ரியூப்புக்களின் விலைகள் அதிகரித்தமையினுல் போக்குவரத்து விடயங்களிலும் சிறிய அதிகரிப்புப் பதிவுசெய்யப்பட்டது. வெற்றிலை, பாக்கு, வீட்டுப் பொருட்கள், ஆகியவற்றின் விலைகள் மிதமாக வீழ்ச்சியுற்றன. புகையிலை குடிவகை, ஆகியவற்றின் விலை அதிகரிப்புகள், புகையிலையின்மீதான உள்நாட்டுப் பொருள்வரி அதிகரிக்கப்பட்டமையையும், தெங்குச் சாராயத்தின் விற்பனை விலை உயர்த்தப்பட்டமையையும் பிரதிபலிப்பனவாகும். புதினப் பத்திரிகைகள், கழுவுசுத்திப் பொருட்கள் ஆகியவற்றின் விலை அதிகரிப்புக்கள், ரூபாவின் நாணய மதிப்

பிறக்கத்தினதும், அ.செ.உ.சா. திட்டம் புகுத்தப்பட்டமையினதும் காரணமாக, இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் விலைகளில் அதிகரிப்புகள் ஏற்பட்டமையினுலாகும்.

### நுகர்வோர் விலைக்குறிகாட்டிக்கு உட்படாத விலைகள்

நுகர்வோர் விலைக்குறிகாட்டிக்கு உட்படாத சில்லறை விலைகளின் தரவுகள் சில பண்டப் பொருட்களுக்குக் கிடைக்கக்கூடியதாயுள்ளன. இவை வாணிபர்களால் அளிக்கப்பட்ட விலைப்பட்டியல்களிலிருந்து ஓரளவுக்கும், சில்லறை விற்பனையாளர்களிடமிருந்து பெற்ற நேரடி விசாரணையினுல் ஓரளவுக்கும் பெறப்பட்டனவாகும்.

#### நுகர்வுப் பொருட்கள்

1968ம் ஆண்டுக் காலப்பகுதியில், கொழும்பில் பச்சை அரிசியினதும் புழுங்கல் அரிசியினதும் வெளிச் சந்தை விலைகள் 7 தொடக்கம் 8 சதவீத அதிகரிப்புகளைப் பதிவுசெய்தன. தானியத் தொகுதியிலுள்ள, உடனடியாகக் கிடைக்கமுடியாமலிருந்த ஏனைய இரு விடயங்களான, சவ்வரிசி, பார்லி, என்பவற்றின் விலைகள் 1968 யூன் வரை அதிகரித்தன. எனினும், 1968 மேயிலே அ.செ.உ.சா. திட்டத்தின்கீழ் இவ்விடயங்களின் இறக்குமதிகள் தளர்த்தப்பட்டமையின் விளைவாக, யூன் மாதத்திற்குப் பின்னர் அவை வீழ்ச்சியுற்றன.

1968ற்குமுன்னர் தளராது அதிகரித்துவந்த மோட்டார்ப் பாகங்களின் விலைகள், ஆண்டின் முன் அரைப் பகுதியில் மேலும் அதிகரித்தன. மோட்டார்ப் பாகங்களின் விலையதிகரிப்பிற்கு, ரூபாவின் நாணய மதிப்பிறக்கத்தினுலேற்பட்டதான, கொ.கா.க. விலை அதிகரிப்பு காரணமாக அமையும். ஆண்டின் பின்னரைப் பகுதியில், குறிப்பிடத்தக்க விலை அதிகரிப்பு எதுவும் காணப்படாதமையால், அ.செ.உ.சா. திட்டத்தின்கீழ் இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதால், மோட்டார்ப் பாகங்களின் தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்பட்டமையே விலை அதிகரிப்புகளை மேலும் அதிகரிக்கவிடாது தடையாக அமைந்திருக்கலாம். மோட்டார் எரியெண்ணெய், உராய்வு நீக்கி எண்ணெய்களின் விலைகள் 1968 ஏப்பிறலில் அதிகரித்தன. இவ் அதிகரிப்புகள் நாணய மதிப்பிறக்கத்தினுல் ஏற்பட்ட கொ.கா.க. விலைகள் அதிகரித்தமையினுலாகும்.

#### நடுத்தரப் பொருட்கள்

1968ற் சகல விநியோகிதர்களாலும் விற்கப்பட்ட உரங்களின் சில்லறை விலைகள், இலங்கை ரூபாவின் நாணய மதிப்பிறக்கத்தினுலேற்பட்ட கொ.கா.க. விலைகளின் அதிகரிப்பின் காரணமாக அதிகரித்தன.

#### முதலீட்டப் பொருட்கள்

கட்டடப் பொருட்களிற் பலவிடயங்களின் விலைகள் 1968ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியுற்றன. உதாரணமாக, 1967ம் ஆண்டின் கடைசிப் பகுதியிலும் 1968ம் ஆண்டின் தொடக்கத்திலும் சில்லறை விற்பனையாளர்களால் ரூ.20/-ற்கு விற்கப்பட்டதான ஒரு மூடை சீமெந்தின் விலை, 1968ம் ஆண்டின் 3ம் கால் பகுதியில் ரூ. 14/-ற்கு வீழ்ச்சியுற்றது. சுகாதாரச் சுத்திப் பாண்டங்களின் விடயத்தில், இன்னமும் கூடுதலான குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது; உயரம் குறைந்த மலகூட ஆசனக் கூட்டங்களின் விலை 1968 ஏப்பிறலின் ரூ. 900 இலிருந்து

1968 பிற்பகுதியில் ரூ. 375/-ற்கு வீழ்ச்சியுற்றது. கரியம் குறைவான எஃகு, சாளரக் கண்ணாடி என்பனவும், குறிப்பிடத்தக்களவு விலைக் குறைப்பைப் பதிவுசெய்தன. மிகுந்த தட்டுப்பாடாயிருந்த இப் பொருட்கள், 1968 மே இல் வழக்கத்திற்கு மாறான உயர்ந்த விலைகளில் விற்கப்பட்டன. அ.செ.உ.சா. திட்டத்தின்கீழ் இப் பொருட்களின் இறக்குமதி தளர்த்தப்பட்டமையே இவற்றின் விலைகளின் கூரிய வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக அமையும். சீமெந்து விடயத்தில் அதன் தட்டுப்பாட்டை நிவிர்த்திசெய்த இன்னுமொரு காரணி அதன் உற்பத்தித் தொகை அதிகரிப்பேயாகும். சீமெந்துக் கூட்டுத் தாபனத்தின் சீமெந்து உற்பத்தி, 1968ல் 16 சதவீதத்தால் அதிகரித்துள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. எண்ணெய்கள், நிறப்பூச்சுகள் ஆகியவற்றின் விலைகள் 1968ல் சாதாரண அதிகரிப்பைப் பதிவுசெய்தன. இதற்கு, 1968 யூலையில் புகுத்தப்பட்ட அதிகரித்த சுழல்வு வரியே காரணமாக அமையும்.

### விலைக் கட்டுப்பாடு

1968ல் அரசாங்கமானது மருந்துப் பொருட்கள் மருந்துவகைகள் முட் கம்பி, கூர்க் கம்பி என்பவற்றை விலைக் கட்டுப்பாட்டிற்குக்கீழ் கொண்டு வந்தது. எனினும், மின்விளக்குக் குமிழிகள், மின்பொறிக் கைவிளக்குப் பற்றறிகள், வெண்சுடர் ஒளித்திரைவலை, மின் ஒளிவிளக்கு, உலர்ந்த செல் பற்றறிகள் (கம்பியில்லா), தையற் பருத்திநூல் (வெள்ளை), மிதிவண்டி, ரயர்கள், ரியூப்புகள், அப்பியாசப் புத்தகங்கள், மொனிற்ரேஸ் அப்பியாசப் புத்தகங்கள் என்பன விலைக் கட்டுப்பாட்டிலிருந்து அகற்றப்பட்டன.

### கூலிகள்

அரசாங்கத் துறையில் எழுதுவினைஞர், தொழில்நுட்ப ஊழியர்கள், சிறு சேவை ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கும், தனியார் துறையில் கூலி நிர்ணய சபை வாய்ந்த தொழில்களிலுள்ள தொழிலாளர்களுக்கும் கூலிவீதக் குறிகாட்டிகள் கிடைக்கக்கூடியதாயிருக்கின்றன. அரசாங்க ஊழியர்களுக்கான கூலி வீதக் குறிகாட்டிகள் 1952ம் ஆண்டை அடி வருடமாகப் பாவித்து, மத்திய வங்கியினாற் கணிக்கப்பட்டுள்ளன. அவை, அத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய பொருத்தமான ஏற்றப்படியளவுகளிலுள்ள குறைந்தபட்ச சம்பளங்களையும் கூலிகளையும், படிகளையும் அடிப்படையாகக் கொண்டனவாகும். எனினும், மேலதிக நேரப் படிகள், சம்பள ஏற்றக் கொடுப்பனவுகள் இக் கணிப்பிற் சேர்க்கப்படவில்லை. தனியார் துறையிலுள்ள தொழிலாளர்களுக்கான கூலிவீதக் குறிகாட்டிகள் தொழிற்றிணைக்களத்தால், 1952ம் ஆண்டை அடிவருடமாகக் கொண்டு வெளியிடப்படுகின்றன. அவை இரண்டு பகுதிகளின்கீழ் தரப்பட்டுள்ளன. அவையாவன, விவசாயத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும், கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுமாகும். இக் குறிகாட்டிகள், கூலி நிர்ணயச் சபையினாற் குறிக்கப்பட்ட குறைந்தபட்சக் கூலி வீதங்களையும், 1967 திசெம்பர் தொடக்கம் தொழிலாளர்களுக்குக் கொடுக்கத்தக்க நாணய மதிப்பிறக்கப் படியையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. எனினும், அவை தொழிலாளர்களின் உண்மையான ஊதியத்தைக் காட்டுவனவல்ல. உண்மையான ஊதியம் வேலைசெய்யும் நாட்களின் எண்ணிக்கை, மேலதிகநேர வேலைசெய்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை, மிகையூதியம் ஆகியவைபோன்ற ஏனைய கொடுப்பனவுகளிற் தங்கியிருக்கும்.

அரசாங்க ஊழியர்களுக்கான வருடாந்தச் சராசரிக் கூலிவீதக் குறிகாட்டிகளை அட்டவணை II (ஏ) 2 காட்டுகின்றது.

அட்டவணை II (ஏ) 2

## அரசாங்க ஊழியர்களுக்கான கூலிவீதக் குறிகாட்டி எண்கள்

(1952 = 100)

| ஆண்டு | எழுதுவினைஞர்களும் தொழில்நுட்ப ஊழியர்களும் | | சிறு சேவை ஊழியர்கள் | | மத்திய அரசாங்க ஊழியர்கள் (அ) | | அரசாங்கப் பாடசாலை அசிரியர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கூலி வீதக் குறி காட்டி | மெய்க் கூலி வீதங்கள் | கூலி வீதக் குறி காட்டி | மெய்க் கூலி வீதங்கள் | கூலி வீதக் குறி காட்டி | மெய்க் கூலி வீதங்கள் | கூலி வீதக் குறி காட்டி | மெய்க் கூலி வீதங்கள் |
| 1957 | 111.2 | 108.2 | 116.0 | 112.8 | 113.8 | 110.7 | 113.9 | 110.8 |
| 1958 | 122.3 | 116.5 | 130.4 | 124.3 | 126.7 | 120.7 | 117.4 | 111.8 |
| 1959 | 122.3 | 116.3 | 130.4 | 124.0 | 126.7 | 120.4 | 117.4 | 111.6 |
| 1960 | 122.3 | 118.2 | 130.4 | 126.0 | 126.7 | 122.4 | 117.4 | 113.4 |
| 1961 | 122.3 | 116.7 | 130.4 | 124.4 | 126.7 | 120.9 | 117.4 | 112.0 |
| 1962 | 122.3 | 115.0 | 130.4 | 122.6 | 126.7 | 119.2 | 117.4 | 110.4 |
| 1963 | 122.3 | 112.4 | 130.4 | 119.9 | 126.7 | 116.5 | 117.4 | 107.9 |
| 1964 | 122.3 | 109.0 | 130.4 | 116.2 | 126.7 | 112.9 | 117.4 | 104.6 |
| 1965 | 122.3 | 108.7 | 130.4 | 115.9 | 126.7 | 112.6 | 117.4 | 104.4 |
| 1966 | 122.3 | 108.9 | 130.4 | 116.1 | 126.7 | 112.8 | 117.4 | 104.6 |
| 1967 | 125.4 | 109.2 | 136.2 | 118.6 | 131.3 | 114.4 | 119.4 | 104.0 |
| 1968 | 140.1 | 115.4 | 163.0 | 134.3 | 152.6 | 125.7 | 129.6 | 106.7 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) எழுதுவினைஞர்கள், தொழில்நுட்ப ஊழியர்கள், சிறு சேவை ஊழியர்கள் ஆகியோருக்கான இணைந்த குறிகாட்டி.

தொழிலாளர்களில் சில வகுப்பினர்க்கு 1967 ஒற்றோபர் தொடக்கம் "இடைக்காலப் படி"யும், 1967 திசெம்பர் தொடக்கம் "நாணய மதிப்பிறக்க இடைக் காலப் படி"யும் கொடுப்பனவு செய்ததன் காரணமாக, அரசாங்கத் தொழிலாளர்களுக்கான சராசரிக் கூலிவீதக் குறிகாட்டிகள், 1967 உடன் ஒப்பிடுகையில் 1968 இல், தொழில்நுட்ப எழுதுவினைஞர் ஊழியர்களுக்கு 11.7 சதவீதத்தாலும், சிறுசேவை ஊழியர்களுக்கு 19.6 சதவீதத்தாலும், அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களுக்கு 8.5 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தன.

வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியிலுள்ள மாற்றங்களுக்காக கூலிவீதக் குறிகாட்டிகளைச் சீர்படுத்தித் தயாரிக்கப்படும் மெய்க் கூலிவீதக் குறிகாட்டிகளும் 1968இல் 1967இலும்பார்க்க அதிகரித்திருந்தன. மெய்க் கூலிகள் தொழில்நுட்ப எழுதுவினைஞர் ஊழியர்களுக்கு 5.6 சதவீதத்தாலும், சிறுசேவை ஊழியர்களுக்கு 13.0 சதவீதத்தாலும், அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களுக்கு 2.6 சதவீதத்தாலும் அதிகரித்தன. இந்த அதிகரிப்புகள், வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியில் 1967க்கும், 1968க்கும், இடையிலேற்பட்ட அதிகரிப்பின் காரணமாக, பண கூலிவீதக் குறிகாட்டிகளில் ஏற்பட்ட தொடர்பான அதிகரிப்புகளிலும் ஓரளவிற்குக் குறைவாக உள்ளன.

கூலி நிர்ணய சபைகள் வாய்ந்த தனியார் துறையிலுள்ள தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலிவீதக் குறிகாட்டிகளை அட்டவணை II (ஏ) 3 காட்டுகின்றது.

அட்டவணை II (ஏ) 3

## கூலி நிர்ணயச் சபைவாய்ந்த தொழில்களிலுள்ள ஊழியர்களின் கீழ்மட்டக் கூலிவீதக் குறிகாட்டி எண்கள்

(1952 = 100)

| ஆண்டு | விவசாய ஊழியர்கள் | | கைத்தொழில் ஊழியர்கள் | | சகல கூலிச்சபை வர்த்தகங்களிலுமுள்ள ஊழியர்கள் (அ) | |
|---|---|---|---|---|---|---|
| | கீழ்மட்டக் கூலிவீதக் குறிகாட்டி | மெய்க் கூலிவீதக் குறிகாட்டி | கீழ்மட்டக் கூலிவீதக் குறிகாட்டி | மெய்க் கூலிவீதக் குறிகாட்டி | கீழ்மட்டக் கூலிவீதக் குறிகாட்டி | மெய்க் கூலிவீதக் குறிகாட்டி |
| 1957 | 108.7 | 105.6 | 104.5 | 101.5 | 107.8 | 104.7 |
| 1958 | 110.2 | 105.2 | 116.1 | 110.9 | 110.8 | 105.6 |
| 1959 | 110.2 | 104.8 | 128.8 | 122.4 | 112.3 | 106.7 |
| 1960 | 110.2 | 106.5 | 128.1 | 123.8 | 111.8 | 108.0 |
| 1961 | 110.7 | 105.6 | 128.4 | 122.5 | 112.3 | 107.2 |
| 1962 | 111.9 | 105.2 | 129.5 | 121.8 | 113.7 | 106.9 |
| 1963 | 113.3 | 104.2 | 130.9 | 120.3 | 115.2 | 105.9 |
| 1964 | 116.0 | 103.5 | 132.8 | 118.4 | 117.8 | 105.0 |
| 1965 | 116.3 | 103.4 | 132.8 | 118.0 | 118.2 | 105.0 |
| 1966 | 116.2 | 103.5 | 133.2 | 118.6 | 118.1 | 105.1 |
| 1967 | 120.4 | 104.9 | 138.9 | 121.0 | 122.2 | 106.4 |
| 1968 | 138.8 | 114.3 | 161.6 | 133.1 | 141.2 | 116.3 |

*மூலம் :* தொழிற்றிணைக்களமும், இலங்கை மத்திய வங்கியும்.

(அ) விவசாயத்திலும், கைத்தொழிலிலும், வர்த்தகத்திலுமுள்ள ஊழியர்களுக்கான இணைந்த குறிகாட்டி.

தனியார் துறையிலுள்ள தொழிலாளர்களுக்கான கூலிவீதக் குறிகாட்டிகளின் அசைவுகள், அரசாங்கத் துறையிலுள்ள தொழிலாளர்களுக்கானதைப் போலவே இருந்தன. 1967 திசெம்பரில் நாணய மதிப்பிறக்க ''இடைக்காலப் படி'' கொடுப்பனவு செய்ததன் காரணமாக, 1968ல் வருடாந்தச் சராசரிக் கூலிவீதக் குறிகாட்டிகள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு 15.5 சதவீதத்தாலும், கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு 16.4 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தன. மெய்க்கூலி வீதங்களின் அதிகரிப்புகள் முறையே 9.6 சதவீதமாகவும் 10.0 சதவீதமாகவும் உள்ளன.

1968ல் தனியார் துறையிலுள்ள ஊழியர்களுக்கு நாணய மதிப்பிறக்க ''இடைக்காலப் படிச் சட்டம்'' எனப்படும் சட்டமொன்றை அரசாங்கம் சட்டமாக்கிற்று. இது 1967ல் அவசரகாலச் சட்டத்தின்கீழ் அமுலாக்கப்பட்டது. ஓர் தேசிய ஊதியப் பேரவையை நிறுவுவதற்கான ஓர் மசோதா, 1968 செத்தெம்பரில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

1968 நவெம்பரில், அரசாங்கச் சேவையிலுள்ள ஊழியர்களின் தற்பொழுது நடைமுறையிலிருக்கும் சம்பளங்கள், கூலிகள், படிகள், இளைப்பாறற் சம்பள உரிமைகள், விடுப்பு, இலவச விடுமுறைப் பயணச்சீட்டுகள், சேவைகளின் நியதிகளும் நிபந்தனைகளும் ஆகியவற்றிற்கு அவசியமான மாற்றங்களை விசாரணைசெய்து விதந்துரைகள் செய்யும்படி ஓர் ஆணைக்குழுவை அரசாங்கம் நியமனஞ் செய்தது. இந்த ஆணைக்குழு, பல்வேறு அரசாங்கத் திணைக்களங்களில் வேலைசெய்யும் ஊழியர்களினதும் போதுமான தன்மை, மேல்மிஞ்சிய தன்மை, தகுதி ஆகியவற்றையும் விசாரணைசெய்யும்.